# சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி
# பிரச்சனைகளும் - தீர்வுகளும்



சிதம்பரம் நடராஜர் கோயில்



அண்ணாமலை பல்கலைக்கழகம்



பரங்கிப்பேட்டை நகரம்



பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள்

## பா.ம.க. வேட்பாளர் இர. அருள்
## அளிக்கும் வாக்குறுதிகள்



**மாம்பழம் சின்னத்தில் வாக்களிப்பீர்!**

# சிதம்பரம் தொகுதியில் அடங்கியுள்ள பகுதிகள்

**நகரம் :** சிதம்பரம்

**பேரூராட்சி :** பரங்கிப்பேட்டை, கிள்ளை, அண்ணாமலை நகர்

**கிராமங்கள் :** வயலாமூர், பூவாலை, அலமேலுமங்காபுரம், பால்வாத்துண்ணான், மணிக்கொல்லை, பெரியபட்டு, சிலம்பி மங்கலம், வில்லியநல்லூர், கொத்தட்டை, அரியகோஷ்டி, சின்னகுமட்டி, வேளங்கிப்பட்டு, சேந்திரக்கிள்ளை, கீழ்மணக்குடி, தச்சக்காடு, மஞ்சக்குழி, பெரியகுமட்டி, நஞ்சைமகத்துவாழ்க்கை, பு.மடுவங்கரை, முட்லூர், பு.முட்லூர், பு.ஆதிவராகநல்லூர், பு.அருண்மொழிதேவன், ஆயிபுரம், குறியாமங்கலம், மேல மூங்கிலடி, கீழமூங்கிலடி, புஞ்சைமாங்காட்டுவாழ்க்கை, தில்லை விடங்கன், பின்னத்தூர், கீழ்னுவம்பட்டு, மேலனுபவம்பட்டு, பாலூத்தங்கரை, மேலசொக்கநாதன்பேட்டை, லால்புரம், தில்லை நாயகபுரம், கோவிலாம் பூண்டி, கொடிப்பள்ளம், ராதாவினாகம், உத்தமசோழமங்கலம், பிச்சாவரம், தாண்டவராயன்சோழகன் பேட்டை, கனக்கரப்பட்டு, நக்கரவந்தன்குடி, சிதம்பரநாதன்பேட்டை, மீதிக்குடி, பள்ளிப்படை, பரமேஸ்வரநல்லூர், சி.தண்டேஸ்வரநல்லூர், சி.கொத்தங்குடி, குமாரமங்கலம், வசப்புத்தூர், கவரப்பட்டு, கீழ்ப்பெரம்பை, திருக்கழிப்பாலை (கீழ்), சித்லப்பாடி, உசுப்பூர், சிதம்பரம், நாஞ்சலூர், வெட்டிமுட்டு, கடவாச்சேரி, சிவபுரி, பேட்டை, வரகூர், திருக்கழிப்பாலை (மேல்), அம்பிகாபுரம், ஜெயங்கொண்ட பட்டினம், பெராம்பட்டு, சாலியந்தோப்பு, கூத்தன்கோயில், இளநாங்கூர், சி.வக்கரமாரி, சிவாயம், பூலாமேடு, தவர்த்தாம்பட்டு, காட்டுக்கூடலூர், வையூர், அகரநல்லூர், வல்லம்படுகை, கீழ்குண்டலப்பாடி மற்றும் எருக்கன்காட்டுப்படுகை கிராமங்கள்.

# அறிமுகம்

சிதம்பரம் தொகுதி நகரப் பகுதிகளும், கிராமங்களும் இணைந்திருக்கும் பகுதியாகும். இங்கு கிராமங்களும் நகரப் பகுதிகளும் ஒன்றைச் சார்ந்து ஒன்று இயங்கியாக வேண்டும். ஒரு முழுமையான நீடித்திருக்கும் நகர்ப்புற மேம்பாடு இங்கு தேவைப்படுகிறது. அதே நேரத்தில் நீடித்திருக்கும் கிராமங் களின் வளர்ச்சியும் அவசியமாகிறது.

விரைவான 'பொருளாதார வளர்ச்சி' (Economic Development), அதன் பலன்களை எல்லோரும் பகிர்ந்துகொள்ளும் 'சமுதாய மேம்பாடு' (Social Development) – இயற்கையை பாதிக்காத வண்ணம் 'சுற்றுச்சூழல் மேம்பாடு' (Environmental Development) ஆகியவற்றை உள்ளடக்கிய உன்னதமான லட்சியம், 'நீடித்திருக்கும் மேம்பாடு' (Sustainable Development) ஆகும். 2016இல் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட நீடித்திருக்கும் மேம்பாட்டு இலக்குகள் 2030 (Sustainable Development Goals 2030) பிரகடனத்தின் கீழ் உலகில் உள்ள எல்லா நாடுகளும் முன்வைக்கும் மாபெரும் லட்சியம் இதுதான்.

இந்த லட்சியத்தை சிதம்பரம் சாதித்தாக வேண்டும். குறிப்பாக –

1. வேலை வாய்ப்புடன் கூடிய விரைவான தொழில் வளர்ச்சி (Sustainable Economic Growth, full and productive Employment)
2. நீடித்திருக்கும் நகர்ப்புற மேம்பாடு (Sustainable Urbanisation)
3. நீடித்திருக்கும் இலாபகரமான வேளாண்மை (Sustainable Agriculture)
4. நீடித்திருக்கும் மீன்வளத் தொழில்கள் (Sustainable Fisheries)
5. இயற்கையுடன் இணைந்த சுற்றுலா (Sustainable Tourism)
6. ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை (Integrated Water Resources Management)
7. ஒருங்கிணைந்த வெள்ள இடர் மேலாண்மை (Integrated Flood Risk Management)
8. உலகத்தரமான உயர்கல்வி பகுதி (Higher Education Centre)
9. குடிநீர், வீட்டுவசதி, பட்டா உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்பாடு

– உள்ளிட்ட அறிவியல்பூர்வமான வழிகளில் சிதம்பரம் பகுதி முன்னேற்றத்தைக் கண்டாக வேண்டும்.

இப்போது இல்லாவிட்டால், இனி எப்போதும் இல்லை. நாம் செய்யாவிட்டால், வேறு எவரும் செய்யப் போவதும் இல்லை. நம்முடைய எதிர்காலம், நமது குழந்தைகளின் எதிர்காலம், எதிர்வரப்போகும் பல தலைமுறைகளின் எதிர்காலம் – இதோ இப்போது நம்முடைய கைகளில் இருக்கிறது. இதுவே தக்க தருணம். வாருங்கள் மாற்றம் படைப்போம். புதியதோர் சிதம்பரம் பகுதியை உருவாக்குவோம்.

# சிதம்பரம் தொகுதியின் புகழ்மிக்க இடங்கள்

## சிதம்பரம்

தமிழ்நாட்டின் நாட்டியத்திற்கும், கட்டடக் கலைக்கும், பக்திக்கும் புகழ்பெற்ற நகரம் சிதம்பரம். சிதம்பரத்துக்கு, தில்லைவனம், பெரும்பற்றப் புலியூர், திருசிற்றம்பலம் என்ற பெயர்கள் உண்டு. 'கோயில்' என்றாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமாளின் கோயிலைத்தான் குறிக்கும். தில்லைக் காளியம்மன் கோயிலும் சிதம்பரம் நகரின் புகழ்பெற்ற ஆலய மாகும்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழகத்தின் இரண்டாவது பல்கலைக்கழகம்; முதல் தனியார் பல்கலைக்கழகம் என்கிற சிறப்புகளைப் பெற்றது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். மீனாட்சிக் கல்லூரியாக இருந்து, பின்னர் 1928ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களால் உருவான புகழ்மிக்க பல்கலைக் கழகம் இதுவாகும். தற்போது தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

## பரங்கிப்பேட்டை

முஸ்லிம்கள் பாரம்பரியமாக வசிக்கும் பரங்கிப்பேட்டை பகுதி ஒரு புராதானமான கடல் வணிகப் பகுதியாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே 'மஹ்மூது பந்தர்' என்று அழைக்கப்பட்ட இடம் இதுவாகும். அண்ணல் முகமது நபி அவர்கள் காலத்திலேயே முஸ்லிம்கள் பரங்கிப்பேட்டையில் குடியேறியதாகவும், அண்ணல் நபி அவர்களின் தோழர் ஹஜ்ரத் உக்காஷா (ரலி) இங்குதான் அடக்கம் செய்யப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

சோழராட்சிக் காலத்திலும் அதற்கு பின்னரும் அஞ்சுவண்ணம் என்றும் மரைக்காயர்கள் என்றும் அழைக்கப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்கள் பரங்கிப்பேட்டையில் இருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதும் கடல் வணிகத்தில் ஈடுபட்டனர்.

பரங்கிப்பேட்டையில் ஆசியாவின் முதல் இரும்புத் தொழிற்சாலை 1830ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்தது. சேலம் மாவட்டத்தின் இரும்புத்தாதுவை காவிரி ஆற்றின் மூலமாக கொள்ளிடம் ஆற்றுக்கும், அதிலிருந்து கான்சாகிப் கால்வாய்க்கால் வழியாக பரங்கிப்பேட்டை கொண்டுவந்து இரும்பு தயாரித்தனர். பரங்கிப்பேட்டை இரும்பைக் கொண்டு

லண்டன் நகரின் பாலங்கள் கட்டப்பட்டன. சென்னை எழும்பூர் இரயில் நிலையம் பரங்கிப்பேட்டை இரும்பால் கட்டப்பட்டது. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி அமையக் காரணமான 'பிரிட்டிஷ் – ஹைதர் அலி' போர் 1781ஆம் ஆண்டில் நடந்த இடமும் பரங்கிப்பேட்டைதான்.

## பிச்சாவரம்

பித்தர்புரம் எனப்படும் பிச்சாவரத்தில் உலகின் இரண்டாவது பெரிய அலையாத்தி காடு அமைந்துள்ளது. (சதுப்புநிலக் காடுகள், மாங்குரோவ் காடுகள்), பிச்சாவரம் பகுதியில்தான் சோழர்களின் போர் துறைமுகம் அமைந்திருந்தது. சோழர்கள் கடல் வணிகத்தை பாதுகாப்பதை தமது கடமையாகக் கொண்டிருந்தனர். கடாரம், ஸ்ரீவிஜயம் உள்ளிட்ட சோழராட்சி யின் தென் கிழக்காசிய பரவலுக்கு வழியாக இருந்தது பிச்சாவரம் தான்.

## தீவுக்கோட்டை

பலராலும் அறியப்படாத இடம் தீவுக்கோட்டை. மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்தோடு கி.பி. 1279ஆம் ஆண்டில் சோழராட்சி முடிவுற்றது என்று பழைய வரலாற்று ஆய்வுகள் குறிப்பிட்டன. ஆனால், அதன் பின்னர் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து, சிதம்பரம் பகுதியின் கடலோரத்தில் தீவுக்கோட்டை எனும் இடத்தில் சோழர் ஆட்சி தொடர்ந்ததாக சமஸ்கிருத நூல்களும், நாயக்கர் வரலாறுகளும் கூறுகின்றன. அதை நிரூபிக்கும் அரண்மனை சிதிலங்களும், கல்வெட்டுகளும் தீவுக்கோட்டை யில் இப்போதும் உள்ளன.

– இவ்வாறாக, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் பல வரலாற்று சிறப்புகளைக் கொண்டிருக்கும் இடம் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி ஆகும்.

# சிதம்பரம் தொகுதியின் பிரச்சனைகள்

சிதம்பரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இங்கு விவசாயம், மீன் பிடித்தல், பூ உற்பத்தி, கவரிங் நகை, சுற்றுலா மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியனவே முதன்மை வாழ்வாதாரங் களாகும். பெரும்பாலான மக்களுக்கு கண்ணியமான வேலைவாய்ப்பு இல்லாததால், வறுமையான சூழலில் சிதம்பரம் தொகுதி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சராசரி தனி நபர் வருவாய் ஆண்டுக்கு 80 ஆயிரம் ரூபாயாக இருக்கும் போது, சிதம்பரம் தொகுதியில் அது சுமார் 40 ஆயிரம் ரூபாய் மட்டுமே. சிதம்பரத்தில் இரண்டு நபர்களின் ஆண்டு வருமானமும், கன்னியாகுமரியில் ஒரு நபரின் ஆண்டு வருவாயும் ஒன்றாகும்.

# சிதம்பரம் தொகுதி வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்?

## தொழில் - வேலை - சுற்றுலா

### I. தொழில் வளர்ச்சி

சிதம்பரம் தொகுதி எந்தவித தொழில் வளர்ச்சியும் இல்லாத மிகவும் பின்தங்கியப் பகுதியாகும். இப்பகுதிக்கு ஏற்ற வகையிலான அதிக வேலை வாய்ப்பபை உருவாக்கும், மாசுபடுத்தாத தொழில் வளர்ச்சி தேவை. விவசாயம் சார்ந்த தொழில்கள், மீன்வளம் சார்ந்த தொழில்கள், இயற்கை வளம் சார்ந்த தொழில்களால் இப்பகுதியை வளர்க்க முடியும். ஆடைகள், கவரிங் நகை போன்ற சிறு தொழில்களுக்கு இது தகுந்த பகுதியாகும். குறிப்பாக மிக அதிகம் பூ உற்பத்தி செய்யப்படும் பகுதியாக இருப்பதால் – வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

### 2. பரங்கிபேட்டை அனல்மின் நிலையம்

பரங்கிப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள தனியார் அனல்மின் நிலை யத்தில் உள்ளூர் மக்களுக்கு நிரந்தரமான வேலைகள் எதுவும் வழங்கப் படுவது இல்லை. இந்நிலையை மாற்றி, சிதம்பரம் தொகுதிக்கும், கடலூர் மாவட்டத்திற்கும் முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அந்த வேலைகளும் பணிப்பாதுகாப்புடன் கூடிய அமைப்புசார்ந்த வேலைகளாக இருக்க வேண்டும்.

### 3. சுற்றுலா

மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக இருந்தும், அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் சிதம்பரம் உள்ளது. போக்குவரத்து, துப்புரவு, சாலைகள், தங்குமிடங்கள், உணவகம் என அனைத்து நிலைகளிலும் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த வேண்டும். சிதம்பரம் நகரில் புதிய அரசினர் விருந்தினர் மாளிகை கட்டப்பட வேண்டும்.

சிதம்பரம் நடராஜர் ஆலயம், தில்லைக் காளியம்மன் கோயில் ஆகியன சிதம்பரம் நகரில் புகழ்பெற்ற ஆலயங்கள். பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் உலகப் புகழ்பெற்ற இயற்கை சுற்றுலா பகுதி ஆகும். பரங்கிப்பேட்டை, பிச்சாவரம், தீவுக்கோட்டை உள்ளிட்ட இடங்கள் வரலாற்று ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா பகுதிகள் ஆகும். இவற்றை நவீன சுற்றுலா வசதிகளுடன் கூடிய பகுதிகளாக மாற்றினால் சுற்றுலாவும் பொருளாதாரமும் மேம்படும்.

பிச்சாவரம் சுற்றுலா தலம் மேம்படுத்தப்பட வேண்டும். அங்கு பணியாற்றும் படகோட்டுநர்கள் வருமானம் அதிகமாக்கப்பட வேண்டும். இயற்கை சுற்றுலாவுக்கு ஏற்ற இடங்களாக பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் உள்ளன. இதேபோன்று கொள்ளிடம் ஆற்றில் அக்கரை ஜெயங்கொண்டப் பட்டினம் பகுதியில் மிகச்சிறந்த படகு சுற்றுலா வசதியை ஏற்படுத்த முடியும்.

வரலாறு, ஆன்மீகம், கல்வி, இயற்கை, மனமகிழ்ச்சி என அனைத்து வகைகளிலும் கூடியதாக சிதம்பரம், அண்ணாமலை நகர், பரங்கிப்பேட்டை, பிச்சாவரம், அக்கரை ஜெயங்கொண்டபட்டினம், தீவுக்கோட்டை என மிகச் சிறந்த சுற்றுலா இடங்கள் சிதம்பரம் தொகுதியை ஒரு முதன்மையான சுற்றுலா பகுதியாக மாற்றும். எனவே சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## பெரியப்பட்டு சைமாடெக்ஸ் சாயப் பட்டறை

### 4. பெரியப்பட்டு சைமாடெக்ஸ் சாயப் பட்டறை

பெரியப்பட்டு, சிலம்பிமங்கலம் பகுதியில் திமுக ஆட்சியில் அறிவிக்கப் பட்டு, அதிமுக ஆட்சியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள சாயப் பட்டறைகள் சிதம்பரம் தொகுதியை பாழ்படுத்தப் போகும் பேராபத்து ஆகும். ஈரோடு, திருப்பூர், கோவை பகுதிகளில் மிகவும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சாயப் பட்டறைகளை சிதம்பரத்தில் அனுமதிக்க முடியாது. அந்த மாவட்டங் களில் உள்ள சாயக்கழிவுகளை சாலை வழியாக கொண்டு வந்து, அதனை பெரியபட்டில் வைத்து சுத்திகரிப்பது போல நாடகமாடி கடலில் கலக்கும் திட்டம் இதுவாகும். இதற்கு தினமும் ஒன்றரை கோடி லிட்டர் அளவுக்கு நிலத்தடி நீரை உறிஞ்சவும் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தால் நிலத்தடி நீர்வளம் சுரண்டப்படும், நிலத்தடி நீர் உப்பாகும். சுற்றுச்சூழல் நாசமாகும். கடல் வளமும் அழிந்து போகும். இப்பகுதி மக்கள் பலவிதமான உடல்நலக் கேடுகளுக்கு ஆளாவார்கள். விவசாயமும், மீன்வளமும் பாதிக்கும். கடும் குடிநீர் பஞ்சம் ஏற்படும்.

மத்திய அரசின் புதிய 'பூஜ்ய திரவக்கழிவு' (Zero Waste) கொள்கைக்கு எதிராக உள்ள இந்த மக்கள் விரோத திட்டம் நிறுத்தப்பட வேண்டும்.

## தண்ணீர்

சிதம்பரம் பகுதியில் தண்ணீர் ஒரு மிகப்பெரிய சிக்கல் ஆகும். வேளாண்மை, வெள்ளம், வறட்சி, நிலத்தடி நீரில் உப்பு கலத்தல், மாசுபாடு, குடிநீர் என எல்லாமும் இங்கு பிரச்சனையாக உள்ளது.

## 5. வாய்க்கால், ஓடை சீரமைப்பு

சிதம்பரம் தொகுதி காவிரியில் கடைமடைப் பகுதி ஆகும். இங்கு வேளாண்மைக்கான தண்ணீரின் தேவை முதன்மையாக உள்ளது. ஒரு காலத்தில் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் விளைந்த மண்ணில் இப்போது ஒரு போகமே திண்டாட்டமாக உள்ளது.

சிதம்பரம் பகுதிக்கு ஆதாரமாக உள்ள வீராணம், வெலிங்டன் ஏரிகள் தூர்வாரப்படவில்லை. தெற்கு ராஜன் வாய்க்கல், வெள்ளியங்கால் ஓடை, கவரப்பட்டு வாய்க்கால், கான்சாகிப் ஓடை, பாசிமுத்தான் ஓடை, அரிய கோஷ்டி வாய்க்கால், உப்பனாறு என எதுவும் முறையாக மராமத்து செய்யப்படவில்லை. எல்லா கால்வாய்களும் வாய்க்கால்களும் புதர்மண்டிக் கிடக்கின்றன. வாய்க்க்கால், ஓடை, குளங்கள் உள்ளிட்ட அனைத்து நீர் வழிகளும், நீராதாரங்களும் சீரமைக்கப்பட வேண்டும்.

## 6. தடுப்பணைகள்

கொள்ளிடம், வெள்ளாறு, பரவனாறு ஆகிய ஆறுகளில் அதிக அளவு தண்ணீர் சென்று கடலில் கலக்கிறது. மறுபுறம் குடிநீருக்கும், வேளாண் மைக்கும் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. கடல்நீர் உட்புகுவதால் நிலத்தடி நீரும் உப்பாகிறது. இந்த ஆபத்துகளை சமாளிக்க, கொள்ளிடம், வெள்ளாறு, பரவனாறு ஆகியவற்றில் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும்.

## 7. கடல்நீர் உட்புகுதல்

சிதம்பரம் பகுதியில் நிலத்தடி நீரில் உப்புநீர் கலப்பது அதிகமாகிவிட்டது. இதனால் மிகப்பெரிய அளவில் தண்ணீர் பஞ்சம் ஏற்படும் ஆபத்து உள்ளது. நிலத்தடி நீர் உப்பாவது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். கொல்லிடம், வெள்ளாறு, பரவனாறு ஆகிய ஆறுகளில் தடுப்பணைகள் கட்டப்படுவதன் மூலம் நிலத்தடி நீர் உப்பாவது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

## 8. விவசாயத்திற்கு கொள்ளிடம் தண்ணீர்

அணைக்கறை பகுதியில் கொள்ளிடம் கீழணையை ஆங்கிலேயர்கள் 1902ஆம் ஆண்டிலேயே கட்டினர். அதனால் கடலூர் மாவட்டத்தின் தென் பகுதி பயன்பெறுகிறது. அதேபோன்று, கொள்ளிடம் நீரை கான்சாகிப் வாய்க்காலுக்குத் திருப்பிவிடும் வகையில் ஆதனூர் - குமாரமங்கலம் இடையில் தடுப்பணை கட்டும் திட்டம் நீண்டகாலமாக காத்திருப்பில் உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றினால் சிதம்பரம் பகுதியின் விவசாயத்தை கணிசமாக மேம்படுத்த முடியும்.

## 9. வெள்ளத்தடுப்பு

ஆண்டுதோறும் வெள்ளத்தில் தத்தளிக்கும் நிலைக்கு சிதம்பரம் பகுதி தள்ளப்பட்டுள்ளது. வல்லம்படுகை, கீழகுண்டலாபாடி, கவரப்பட்டு, பிச்சாவரம், ஜெயங்கொண்டபட்டினம் உள்ளிட்ட சிதம்பரம் தொகுதியின் அனைத்து கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்குகின்றன. இதனைத் தடுக்க ஒருங்கிணைந்த வெள்ள இடர் மேலாண்மை சிறப்புத் திட்டம் (Integrated Flood Risk Management) நிறைவேற்றப்பட வேண்டும். முன்கூட்டியே தயார் நிலையில் இருந்து வெள்ளத்தை தடுக்கவும், எதிர்கொள்ளவும், சமாளிக்கவு மான அறிவியல்பூர்வமான அணுகுமுறை இதுவாகும்.

## 10. ஆற்றோரங்களில் மண் அரிப்பு

கொள்ளிடம் ஆற்றில் அக்கரை ஜெயங்கொண்டபட்டினம், வெள்ளாற்றில் மேலமூங்கிலடி, கான்சாகிப் மண்டபம் உள்ளிட்ட இடங்களில் கணிசமான இடங்கள் ஆற்று நீரோட்டத்தில் அரித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனைத் தடுக்க மண் அரிப்பைத் தடுப்பதற்கான தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

## 11. அருவாமூக்கு திட்டம்

வெள்ளக் காலங்களில் பரவனாற்றில் வெள்ளப் பெருக்கு எடுத்து, கீழ் பகுதி கிராமங்களான பூவாலை, வயலாமூர், சாத்தப்பாடி, பால்வாத் துண்ணான், காக்கா மண்டபம், வில்லியநல்லூர், புதுச்சத்திரம் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் சாகுபடி பயிர்கள், குடியிருப்பு பகுதிகள் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனைத் தடுக்க மழைக் காலங்களில் தண்ணீர் நேரடியாக கடலில் கலக்கும் வகையில் ‘அருவாமூக்கு’ திட்டம் செயல்படுத்தப் பட வேண்டும்.

# கான்சாகீப் ஓடை கழிவுநீர் மாசுபாடு

## 12. கான்சாகீப் ஓடை கழிவுநீர் மாசுபாடு

சிதம்பரத்தை ஒட்டிச் செல்லும் கான்சாகிப் ஓடை (பாலமான் ஓடை), இப்போது சிதம்பரம், அண்ணாமலை நகரப் பகுதிகளின் கழிவுநீர் ஓடையாகிவிட்டது. இதனால், சிதம்பரத்துக்கு கிழக்கில் கிள்ளை வரை உள்ள ஊர்களின் சுகாதாரமும் விவசாயமும் கடும் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. சிதம்பரம் அண்ணாமலை நகரின் நிலத்தடி நீரும் மாசுபட்டுள்ளது. இந்த பாலமான் ஆற்றின் மாசுபாடு முற்றிலும் தடுக்கப்பட வேண்டும்.

## குடிநீர்

### 13. குடிநீர்

தண்ணீர் ஒரு அடிப்படை மனித உரிமை. அனைத்து வீடுகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட தூய குடிநீர் நேரடியாக குழாய் மூலம் இலவசமாக வழங்கப்படும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

சிதம்பரம் நகரப் பகுதிக்கான குடிநீர் வசதிகள் மிகப் பழமையான வக்கராமாரி குடிநீர்த்திட்டத்தின் மூலமும், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் அறைகுறையாக குடிநீர் அளிக்கப்படுகிறது. வக்கராமாரி குடிநீர் சுத்திகரிப்பு முறையான நவீன முறைக்கு மாற்றப்பட வேண்டும். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேம்படுத்தப்பட்டு அனைத்து பகுதி களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். சிதம்பரம் நகரை விரிவாக்கம் செய்து, அனைவருக்கும் மிகத் தூய்மையான இலவசக் குடிநீர் உறுதி செய்யப்பட வேண்டும்.

பரங்கிப்பேட்டை ஒன்றியம், குமராட்சி ஒன்றியம், மேல்புவனகிரி ஒன்றியம் ஆகியவற்றில் அடங்கியுள்ள ஊராட்சிகள், கிள்ளை பேரூராட்சி உள்ளிட்ட பல இடங்களில் குடிநீர் பற்றாக்குறை மிகப்பெரிய அளவில் உள்ளது. முழுமையான குடிநீர் வழங்கல் திட்டங்கள் மூலம் சிதம்பரம் தொகுதியின் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

## சிதம்பரம் நகரம்

### 14. நகராட்சி விரிவாக்கம்

சிதம்பரம் நகரின் புறநகர்ப் பகுதிகள் அனைத்தும் பல மடங்கு வளர்ந்துள்ளன. ஆனால், நகரின் கட்டுமான வாய்ப்புகள் அங்கு இல்லை. எனவே, அண்ணாமலை நகர், உசுப்பூர், லால்புரம், தண்டேஸ்வரநல்லூர், நான் முனிசிபல், பள்ளிப்படை, கொத்தங்குடி உள்ளிட்ட சிதம்பரம் நகரின் அனைத்து புறநகர் பகுதிகளையும் ஒன்றிணைத்து பரந்த அளவிலான சிதம்பரம் நகராட்சியாக அறிவிக்க வேண்டும்.

### 15. புதை சாக்கடைத் திட்டம்

தமிழ்நாட்டில் முதன்முதலில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் பட்ட நகரம் சிதம்பரம். ஆனால், இப்போது சிதம்பரம் நகரில் சாக்கடை தெருக்களில்தான் ஓடுகிறது. பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டும் அது வெறும் அறிவிப்பாக மட்டுமே உள்ளது. சிதம்பரம் நகரப் பகுதி விரிவாக்கப்பட்டு அனைத்து பகுதிகளுக்குமான முழுமையான நவீன

பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட வேண்டும். கழிவுநீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட வேண்டும். ஒரு சொட்டு கழிவுநீர்கூட தெருக்களில் ஓடாத நிலை உருவாக வேண்டும்.

### 16. நான்கு வீதிகளில் நிலத்தடி கேபிள் மின் இணைப்பு

ஆண்டுக்கு இரண்டு முறை புகழ்பெற்ற நடராஜர் தேர் ஊர்வலம் நடக்கும் சிதம்பரம் நகரின் நான்கு வீதிகளிலும் மின்சார விநியோகத்தை நிலத்தடி கேபிள் மூலம் அளிக்க வேண்டும்.

### 17. தூய நகரம்

குப்பை உருவாகாத, குப்பையே இல்லாத (Zero Waste) நகரங்களாக சிதம்பரம் நகரம் மாற்றப்பட வேண்டும்.

### 18. நலமான நகரம்

சிதம்பரம் நகரம் பசுமை நகரமாக ஆக்கப்பட வேண்டும். பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் பாதுகாப்பாகவும், தூய்மையாகவும் பராமரிக்கப்பட வேண்டும். நடக்கவும், மிதிவண்டியில் செல்லவும், வாய்ப் புள்ள இடங்களில் மக்கள் ஒன்று கூடவும், விளையாடவுமான கட்டமைப்புகள் உருவக்கப்பட வேண்டும். நகர்ப்புற சுற்றுச்சூழல் காப்பாற்றப்பட வேண்டும்.

### 19. வைஃபை நகரம்

சிதம்பரம் நகரம் தகவல் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட நிலையை அடைய வேண்டும். எனவே, அனைத்து நகர்ப்பகுதிகளிலும் அதிவேக இணைய வசதிகள் உறுதி செய்யப்படுவதுடன், பொதுமக்கள் கூடும் பகுதிகளில் இலவச அதிவேக வைஃபை (Free Wi-Fi) வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### 20. புதிய பேருந்து நிலையம்

சிதம்பரம் நகருக்கான விரிவுபடுத்தப்பட்ட புதிய பேருந்து நிலையம், புறவழிச்சாலை பகுதிக்கு மாற்றப்பட வேண்டும்.

## போக்குவரத்து

சிதம்பரம் நகரம் இந்தியாவின் முக்கியமான ஆன்மீக தலமும், சுற்றுலாப் பகுதியும் ஆகும். ஆனாலும், சுற்றுலாவையும், பொருளா தாரத்தையும் மேம்படுத்தும் வகையிலான போக்குவரத்து வசதிகளில் இன்னமும் பற்றாக்குறையே உள்ளது.

## 21. சிதம்பரத்தில் புவனேஸ்வரம் - இராமேஸ்வரம் தொடர்வண்டி

லிங்கராஜா எனும் சிவன் கோயில் உள்ள புவனேஸ்வரத்தையும், சிவ ஆலயம் உள்ள இராமேஸ்வரத்தையும் இணைக்கும் 'புவனேஸ்வரம் – இராமேஸ்வரம்' தொடர்வண்டி சைவ தலைமையிடமான தில்லைச் சிதம்பரத்தில் நிற்காமல் செல்வது முரண்பாடானதாகும். அனைத்து தொடர் வண்டிகளும் சிதம்பரத்தில் நின்று செல்ல வேண்டும்.

## 22. பரங்கிப்பேட்டை

சிதம்பரம் வழியாக செல்லும் தொடர்வண்டிகளில் ஒன்றிரண்டாவது பரங்கிப்பேட்டையில் நின்று செல்ல வேண்டும். பரங்கிப்பேட்டையில் இருந்து சென்னைக்கு நேரடியாக அரசுப் பேருந்துகளை இயக்க வேண்டும்.

## 23. சிதம்பரம் - அரியலூர் - ஆத்தூர் தொடர்வண்டி இணைப்பு

சிதம்பரம் நகரை அரியலூர் வழியாக சேலம் மாவட்டம் ஆத்தூருடன் இணைக்கும் தொடர்வண்டிப் பாதைக்கான ஆய்வினை இந்திய இரயில்வே அமைச்சகம், முன்னாள் இரயில்வே அமைச்சர் வேலு காலத்தில் நடத்தியுள்ளது. இத்திட்டம் காலம் தாழ்த்தாமல் செயல்படுத்த வேண்டும்.

## 24. சாலைகள்

சிதம்பரம் பகுதியின் சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, கிராமப்புற சாலைகளின் ஓரங்களில் மண் அமைக்கப்பட வேண்டும்.

## 25. சிதம்பரம் - பேருந்து பாதை

சிதம்பரத்திலிருந்து குமராட்சி வழியாக காட்டுமன்னார்குடியை இணைக்கும் சாலை, பாலங்கள் பலமிழந்ததால் தடைப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியில் கட்டப்பட்ட செட்டிமுட்டு பாலம், குமராட்சி கான்சாகிப் பாலம் ஆகியன பழுதடைந்து பேருந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் 150 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தஞ்சை, திருச்சி, திருப்பூர், கோவை செல்லும் பாதை மறைக்கப்பட்டுள்ளது. இப்பாலங்கள் உடனடியாக கட்டப்பட வேண்டும்.

## 26. சிதம்பரம் - ஜெயங்கொண்டப்பட்டினம் பேருந்து

சிதம்பரத்திலிருந்து வேளக்குடி, பெராம்பேட்டு, ஜெயங்கொண்டபட்டினம் பேருந்து சென்ற பாதை இப்போது இல்லை. இந்த பாதையில் பேருந்து செல்லும் வகையில் உடனடியாக பாதை சீரமைக்கப்பட வேண்டும்.

திட்டுக்காட்டூர், கீழகுண்டலாபாடி, அக்கரை ஜெயங்கொண்டபட்டினம் பகுதியை இணைக்க, மேல்நிலைப்பாலம் அமைக்கப்பட வேண்டும்.

### 27. சாலைப் பாதுகாப்பு

புறவழிச் சாலைகளில் விபத்துகள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும். இதற்காக ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்புத் திட்டம் செயலாக்கப்பட வேண்டும்.

## கல்வி

### 28. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டின் முதன்மைப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக அண்ணா பல்கலைக்கழகம் மாற்றப்பட வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகம் போன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஊழியர்களின் பணியும் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஊதியம், சலுகைகள் அனைத்திலும் ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஊழியர் இடமாற்றம் அவர்களின் விருப்பத்தின் பேரில், விரும்பும் ஊருக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும்.

### 29. மகளிர் கல்லூரி

சிதம்பரம் பகுதியில் பெண்கள் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், சிதம்பரத்தில் மகளிர் கல்லூரி அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை மிக நீண்டகாலமாக இருக்கிறது. இக்கல்லூரி உடனடியாக சிதம்பரம் நகரில் அமைக்கப்பட வேண்டும்.

## மருத்துவம்

### 30. சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

சிதம்பரம் பகுதியில் அதி உயர் மருத்துவமனை இல்லை. இதனை மாற்ற, அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள இராஜா முத்தையா மருத்துவமனை, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்றப்பட வேண்டும்.

சிதம்பரம் நகரின் மருத்துவமனை மேம்படுத்தப்பட வேண்டும். தில்லையம்மன் கோயிலில் சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

## குடிசைகளுக்கு பட்டா மற்றும் அடிப்படை வசதிகள்

### 31. குடிசைகளுக்கு பட்டா மற்றும் அடிப்படை வசதிகள்

சிதம்பரம் நகரம் மற்றும் பேரூராட்சிகளிலும், பல ஊராட்சிகளிலும் பல ஆண்டுகளாக குடிசைகளில் வசித்துவரும் மக்களின் அடிப்படைத் தேவைகள் எதையும் நிறைவு செய்ய இயலாத நிலையில் உள்ளன. குறிப்பாக, பட்டா இல்லாததால் அரசாங்கத்தின் சேவைகள் முழுமையாக சென்றடையாத நிலை உள்ளது. சாலை, குடிநீர், வாய்க்கால் பாலம் என எந்த வசதியும் முழுமை அடையாத நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையை மாற்றி, நீண்டகாலமாக பட்டா இல்லாமல் குடியிருந்துவரும் அனைவருக்கும் பட்டா வழங்கப்பட வேண்டும். அப்பகுதிகளுக்கு சாலை, பாலம், தண்ணீர், கழிப்பிட வசதி, மின் விளக்கு போன்ற அனைத்தும் உடனடியாக அளிக்கப்பட வேண்டும்.

## முதலை பண்ணை

### 32. முதலை பண்ணை

சிதம்பரம் பகுதி, உப்பனாற்றில் முதலைகளால் பலர் பலியாகியுள்ளனர். இதனைத் தவிர்க்க நெய்வேலியில் முதலைப் பண்ணை அமைக்கப்பட்டு, முதலைகள் அதில் விடப்பட வேண்டும்.

## சிதம்பரம் தொகுதி வாக்காளர்களுக்கு பா.ம.க. வேட்பாளர் இர.அருள் அளிக்கும் வாக்குறுதிகள்

1. சிதம்பரம் தொகுதியில் வேலைவாய்ப்பை அதிகமாக்கும் வகையில் தொழில் வளர்ச்சியை கொண்டுவர பாடுபடுவேன்.
2. பரங்கிப்பேட்டை அனல்மின் நிலையத்தில் உள்ளூர் மக்களுக்கு நிரந்தர வேலைகள் கிடைக்க ஆவண செய்வேன்.
3. சிதம்பரம் பிச்சாவரம், பரங்கிப்பேட்டை, அக்கரை ஜெயங்கொண்டபட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா முதன்மை பெறச் செய்வேன்.
4. பெரியப்பட்டு பகுதியில் சைமாடெக்ஸ் சாயப்பட்டறை தொழிற்சாலை அமையாமல் தடுத்து நிறுத்த வழி செய்வேன்.
5. சிதம்பரம் தொகுதியின் அனைத்து ஓடைகள், வாய்க்கால்கள், நீர்நிலைகளை சீரமைக்க செய்வேன்.

6. கான்சாகிப் ஓடை (பாலமான்) கழிவுநீரை தூய்மை செய்ய வழி செய்வேன்.

7. கடல்நீர் உட்புகாமல் தடுக்கவும், நீர்வளத்தை மேம்படுத்தவும் கொள்ளிடம், வெள்ளாறு, பரவனாறு ஆகியவற்றில் தடுப்பணைகள் கட்ட பாடுபடுவேன்.

8. கொள்ளிடத்தில் புதிய தடுப்பணைக் கட்டி கான்சாகிப் வாய்க்காலுக்கு தண்ணீரை திருப்பும் திட்டம் நிறைவேற வழிசெய்வேன்.

9. சிதம்பரம் பகுதி வெள்ளத்தில் மூழ்காமல் தடுக்க ஒருங்கிணைந்த வெள்ளத்தடுப்பு திட்டம் செயல்படுத்தப்பட பாடுபடுவேன்.

10. கொள்ளிடம் ஆற்றில் ஜெயங்கொண்டபட்டினம், வெள்ளாற்றில் மேலமூங்கிலடி பகுதிகளில் மண்அரிப்பைத் தடுக்க பாடுபடுவேன்.

11. பரவனாற்று வெள்ளநீர் வடிய அருவாமூக்கு திட்டம் செயல்படுத்த வழிசெய்வேன்.

12. அனைத்து வீடுகளுக்கும் அனைத்து கிராமங்களுக்கும் தூய்மையான குடிநீர் கிடைக்க வழிசெய்வேன்.

13. அண்ணாமலைநகர், உசுப்பூர், பள்ளிப்படை, லால்புரம், நான்முனிசிபல், கொத்தங்குடி உள்ளிட்ட புறநகர் பகுதிகளை இணைத்து சிதம்பரம் நகராட்சியை விரிவாக்க பாடுபடுவேன்.

14. விரிவுபடுத்தப்பட்ட சிதம்பரம் நகரில் முழுமையான புதை சாக்கடை திட்டத்தை செயலாக்கச் செய்வேன்.

15. சிதம்பரம் நகரின் நான்கு வீதிகளிலும் நிலத்தடி மின் கேபிள் இணைப்பு அமைக்க செய்வேன்.

16. சிதம்பரம் நகரை தூய்மையான, நலமான பசுமை நகரமாக மாற்ற வழி செய்வேன்.

17. புதிய பேருந்து நிலையம் அமைக்க பாடுபடுவேன்.

18. குடிசைப் பகுதிகள் அனைத்தையும் மேம்படுத்தவும், நிரந்தர பட்டா வழங்கவும், குடிநீர், சாலை வசதிகள் அனைத்தும் கிடைக்க பாடுபடுவேன்.

19. புவனேஸ்வரம் – இராமேஸ்வரம் விரைவு தொடர்வண்டி சிதம்பரத்தில் நின்று செல்ல ஆவண செய்வேன்.

20. பரங்கிப்பேட்டையில் விரைவு தொடர்வண்டிகள் நின்று செல்லவும், பரங்கிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு நேரடி பேருந்துகள் செல்லவும் பாடுபடுவேன்.

21. சிதம்பரம் – அரியலூர் – ஆத்தூர் புதிய தொடர்வண்டிப் பாதை அமைய பாடுபடுவேன்.

22. சிதம்பரம் – குமராட்சி – காட்டுமன்னார்குடி வழியில் புதிய பாலங்கள் அமைக்கச் செய்வேன்.

23. சிதம்பரம் பகுதியில் சாலை விபத்துகள் நடக்காமல் தடுக்க வழிசெய்வேன்.

24. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பணி பாதுகாப்பு கிடைக்கவும், தலைச்சிறந்த பல்கலைக்கழகமாக மாற்றவும் பாடுபடுவேன்.

25. சிதம்பரத்தில் மகளிர் கல்லூரி அமைக்க வழிசெய்வேன்.

26. இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவமனையாக மாற்ற பாடுபடுவேன்.

27. சிதம்பரம் பகுதியில் முதலைகளால் ஏற்படும் ஆபத்துகளை தடுக்க முதலைப் பண்ணை அமைக்க வழிசெய்வேன்.

28. சிதம்பரம் பகுதியில் மலர்களில் இருந்து வாசனைத் திரவியம் (செண்ட்) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வழி செய்வேன்.

**சிதம்பரம் தொகுதியில் மேற்கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிட...**

**வருகின்ற சட்டமன்றத் தேர்தலில்**



**இர. அருள்**

**அவர்களை ஆதரித்து**

**மாம்பழம் சின்னத்தில்**

**வாக்களிக்க வேண்டுகிறோம்.**

Facebook.com/Arul4CDM / www.Arul4CDM.com